impact
www.impactmeasurement.co.in

Daily Thanthi

Chennai - Jan 03, 2018

Page No: 6
Page Name: n.a.
Size: 139 sq. cm
AVE: INR 140,272

Type: Newspaper
Language: Tamil
Circulation: 463,780
Frequency: Daily

News monitored for: Lemon Tree Hotels
Title: Lemon Tree gets Sebi nod for IPO

# லெமன் ட்ரீ ஹோட்டல்ஸ் பங்கு வெளியிட செபி அனுமதி

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

லெமன் ட்ரீ ஹோட்டல்ஸ் நிறுவனம் புதிய பங்குகள் வெளியிட பங்குச்சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான செபி அனுமதி அளித்துள்ளது.




## நான்கு பிராண்டுகள்

லெமன் ட்ரீ ஹோட்டல்ஸ் நிறுவனம் 2002–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம், நாடு முழுவதுமாக 24 நகரங்களில் 40 ஹோட்டல்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த ஹோட்டல்களில் மொத்தம் 4,300 அறைகள் உள்ளன. இந்நிறுவனத்தின் கீழ் லெமன் ட்ரீ பிரிமியர், லெமன் ட்ரீ ரிசார்ட்ஸ், லெமன் ட்ரீ ஹோட்டல்ஸ் மற்றும் ரெட் பாக்ஸ் ஹோட்டல்ஸ் ஆகிய நான்கு பிராண்டுகள் செயல்பட்டு வருகின்றன.

லெமன் ட்ரீ ஹோட்டல்ஸ் நிறுவனம், தனது விரிவாக்க நடவடிக்கைகளுக்குத் தேவையான பகுதி நிதியை திரட்டும் வகையில் புதிய பங்கு வெளியீட்டில் களம் இறங்க முடிவு செய்துள்ளது. எனவே அதற்கு அனுமதி வேண்டி பங்குச் சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான செபிக்கு விண்ணப்பித்தது. செபி இப்போது அனுமதி வழங்கி இருக்கிறது.

லெமன் ட்ரீ ஹோட்டல்ஸ் நிறுவனத்தின் பங்கு வெளியீட்டில் மேப்பிள் வுட், விஸ்பெரிங் ரிசார்ட்ஸ், பாம்ஸ் இண்டர்நேஷனல் மற்றும் ஆர்.ஜே. கார்ப் உள்ளிட்ட தற்போதைய பங்குதாரர்களின் சுமார் 19.58 கோடி பங்குகள் வெளியிடப்பட உள்ளது. வெளியீட்டுக்கு பிறகான நிறுவனத்தின் அளிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் இது 24.09 சதவீதமாக இருக்கும்.

## நிர்வகிக்கும் நிறுவனங்கள்

கோட்டக் மகிந்திரா கேப்பிட்டல், சி.எல்.எஸ்.ஏ. இந்தியா, ஜே.பி. மார்கன் இந்தியா, யெஸ் செக்யூரிட்டீஸ் ஆகிய நிறுவனங்கள் லெமன் ட்ரீ ஹோட்டல்ஸ் பங்கு வெளியீட்டை நிர்வகிக்கின்றன. வெளியீட்டிற்கு பிறகு இந்நிறுவனத்தின் புதிய பங்குகள் மும்பை மற்றும் தேசிய பங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட உள்ளன.



© Daily Thanthi
www.dailythanthi.com